ஏப்பிரல் 2017

அன்பார்ந்த பெற்றோர்/பாதுகாவலர்கள் அறியத் தருவது:

பென்டேல் வணிக மற்றும் தொழில்நுட்ப கல்வி நிலையம் (Bendale Business and Technical Institute) மற்றும் டேவிட் அன்ட் மேரி தொம்சன் கொலிஜியேற் கல்வி நிலையம் (David and Mary Thomson Collegiate Institute) ஆகிய இரண்டிற்கும் பதிலாக நிறுவப்பட உள்ள புதிய பாடசாலையின் கட்டுமானப் பணி, ஏப்பிரல் 17ம் திகதிக்கான வாரத்தில் ஆரம்பித்து விட்டது. இப்பணியின் பொழுது அதன் விளைவாக ஏற்படும் தாக்கத்துக்கு உள்ளாகும் நிலையில் இருக்கும் நிலப்பரப்பின் அளவு வரைபடம், இக்கடிதத்தின் மறுபக்கத்தில் இருப்பதைத் தயவு செய்து பார்த்துக் கொள்ளுங்கள்.

கட்டுமானப் பணியின் ஆரம்பகால வேலையின் பொழுது நீங்கள் அறிந்து கொள்ள வேண்டுமென நாம் விரும்பும் சில நிலப்பகுதி விபரங்கள் கீழே தரப்பட்டு உள்ளன:

- டொன்வூட் வாகன நிறுத்தல் பகுதிக்கு (Donwood Parking Lot) இட்டுச் செல்லும் வளைவுப் பாதையினைப் பெற்றோர் தமது பிள்ளைகளை வாகனத்தில் ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் தொடர்ந்து உபயோகிப்பர். **ஹைபுறூக் வாகன நிறுத்தல் பகுதிக்கான**(Highbrook Parking Lot) **வளைவுப் பாதையினை பிள்ளைகளை இறக்கும் தேவைக்குப் பயன்படுத்தக் கூடாது**. ஏனெனில் கட்டுமானப் பணிக்குரிய வேலி அமைப்பின் காரணமாக இங்கு கணிசமான அளவு வெற்றிடம் குறைந்து காணப்படும்.
- மைதானத்தில் இருந்து பாடசாலைக்கு இட்டுச் செல்லும் வழிப்பாதைகளும் பாதிக்கப்பட்டு இருக்கும். பாடசாலைக்கு இட்டுச்செல்லும் மேற்குப் பகுதி வழிப்பாதை தடை செய்யப்பட்டு இருக்கும் என்ற போதிலும், இதற்கு ஒரு மாற்று வழி உண்டு. மைதானத்தில் இருந்து பாடசாலைக்கு இட்டுச் செல்லும் கிழக்குப் பகுதி வழிப்பாதையை தொடர்ந்து உபயோகிக்க முடியும்.
- எமது கால்பந்தாட்ட விளையாட்டு மைதானம் (soccer field) மே மாதம் 24ம் திகதி வரை திறந்து வைக்கப்படும். அதன் பிறகு ஒரு வேலி அடைத்து அது வேறாக்கப்படும் என்ற காரணத்தால், மைதானப் பிரதேசம் சுருங்கி விடும். கால்பந்தாட்ட விளையாட்டுக்குரிய கம்பங்களை சிலசமயம் அகற்றுவது பற்றி எம்மிடையே கலந்துரையாடல் நடைபெற்று வருகிறது.
- இறுதியாக அதே அளவு முக்கியத்துவம் வாய்ந்த இன்னுமொரு விடயம், **பாதுகாப்பு** ஆகும். எல்லாப் பிள்ளைகளும் தமது பாதுகாப்பைக் கருதி கட்டுமானப் பகுதிக்கு வெளியே நின்று கொள்ள வேண்டும். தயவு செய்து இது பற்றி உங்கள் பிள்ளைகளுக்கு நினைவூட்டுங்கள். புறொக்லி டிறைவ் (Brockley Drive) வீதியில் பயணிக்கையில் இதனை மனதில் வைத்திருப்பது அவசியம். ஏனெனில் கட்டுமான ஸ்தலத்துக்குள் புகுவதற்கான வாயிலாக இவ்வீதியைக் கட்டுமானப் பணியில் ஈடுபடும் பார வண்டிகள் உபயோகிக்க நேரிடும்.

இக்கட்டுமானக் காலத்தின் பொழுது, குறித்த மூன்று பாடசாலைகளும் வெளிப்புறம் பயன்படுத்தக் கூடியதாக உள்ள வெற்றிடப் பகுதியை ஒருங்கிணைந்து ஒன்றுசேர்ந்த ஒரு முறையில் பயன்படுத்தும் என்பதுடன், இந்த ஏற்பாடு 2019ம் ஆண்டு கோடை காலம் வரையில் நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. TDSB பாடசாலைச் சபையின் பணியாளர்கள் இக்கட்டுமான வேலைக்கான ஒப்பந்த நிறுவனமான எவர்ஸ்றோங் கொன்ஸ்றக்சன்ஸ் லிமிட் (Everstrong Constructions Ltd) அமைப்புடன் கிரமமான முறையில் தொடர்பினைப் பேணி, இத்திட்டத்தின் முன்னேற்றத்தை கண்காணித்து வருவர் என்பதுடன், மாணவர்கள், பணியாளர்கள் மற்றும் வருகையாளர்களின் பாதுகாப்பினை எல்லா நேரங்களிலும் உறுதி செய்து கொள்ளுவர்.

இக்கட்டுமானப் பணி நிகழும் காலம் முழுவதும் நீங்கள் காட்டும் பொறுமையையும் ஒத்துழைப்பையும் நாங்கள் பெரிதும் மதிக்கிறோம்.

இங்ஙனம் நேர்மையுடன்,